தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1975, மே 2

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. அரசினர் தீர்மானங்கள்.

(அ) விதி 22-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்ட மன்றப் பேரவை விதி 22-ன்கீழ் முதல் ஒரு மணி நேரம் "வினாக்கள்–விடைகள்" என்றுள்ளதை இன்று தளர்த்த வேண்டும்"

என முன்மொழிகின்றேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அது உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்]

(2) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

(அ) வறட்சி நிவாரணப் பணிகள் நிறுத்தப்பட்டதும், அதன் விளைவுகளும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், திரு. சோ. அழகர்சாமி அவர்களும்

'serious situation arising out of stoppage of relief work for the past one month resulting in drinking water scarcity, unemployment in villages leading to inability tobuy daily needs for majority of the affected areas'

என்ற பொருள்பற்றி விவாதிக்க ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறது. அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கும் என்ற காரணத்தினால் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.